[2008 நவம்பர் 12

14—

புதிய கட்டடம்

***33793—திரு. என். மாலைராஜா:**

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி வட்ட அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா.

திரு. என். மாலைராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் அமைந்துள்ள திருநெல்வேலி வட்டாட்சியர் அலுவலகம் இயங்குகின்ற கட்டடம் மிகவும் பழமைவாய்ந்த கட்டடமாகும். 1905 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட கட்டடமாகும். திருநெல்வேலி மாவட்டத் தலைநகரம் நெல்லையின் மையப் பகுதியில் அமைந்துள்ளது. சுமார் 30 கி.மீ. சுற்றளவையும், 4½ இலட்சம் மக்கள் தொகையையும், 2 இலட்சம் வாக்காளர்களையும் கொண்ட பெரிய தாலுகாவாக இயங்கி வருகிறது. தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து போகின்ற இடமாக இருக்கின்ற காரணத்தால், போதிய இடம் இல்லாமல் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். எனவே, பொதுமக்களின் நலனைக் கருத்திற்கொண்டு, சொல்வதை மட்டுமல்ல, சொல்லாததையும் செய்து வருகிற தலைவர் கலைஞரின் நல்லாட்சியில் நெல்லை மக்களின் நீண்டகால கோரிக்கையான, நெல்லை வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தந்திட மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

2008 நவம்பர் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-00

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருநெல்வேலி வட்டாட்சியர் அலுவலகம் மிகவும் பழுதடைந்துள்ள நிலையைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதுசம்பந்தமாக மாவட்ட ஆட்சியரினுடைய செயற்குறிப்பு இதுவரை அரசுக்கு வரவில்லை. வந்தவுடனே வருகிற நிதியாண்டிலே அதுபற்றி நிச்சயமாக அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். மாலைராஜா.

திரு. என். மாலைராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மக்களின் நீண்டகால கோரிக்கையை மனதில் கொண்டு, வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சியரிடமிருந்து செயற்குறிப்பைப் பெற்று, விரைவில் அதற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தந்திட வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ இரண்டு இலட்சம் வாக்காளர்கள் உள்ள தொகுதி சோளிங்கர் தொகுதி. நிர்வாக வசதிக்காக சோளிங்கரை தனித் தாலுகாவாக அறிவிக்க வேண்டுமென்று பல முறை வலியுறுத்திக் கூறி வருகின்றேன். பலமுறை அமைச்சர் அவர்களிடத்திலும் தெரிவித்திருக்கிறோம். அதனால் மிகவும் பின்தங்கிய தொகுதியான சோளிங்கர் தொகுதியில் உள்ள சோளிங்கரைத் தனித் தாலுகாவாக அறிவித்து, அதற்கு ஒரு புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையிலே ஐந்தாவது முறையாக ஆட்சி ஏற்பட்டபோது, 15 வட்டாட்சியர் அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களிலே இயங்கி வந்தன.

அவை அனைத்தும் இன்றைக்கு அரசுக் கட்டடங்களாக மாற்றப்பட்டு பணிகள் முடிவடைந்திருக்கின்றன. அதேசமயத்திலே கடந்த ஆண்டு பழுதடைந்த அலுவலகங்களைப் புதுப்பிக்க, மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்ட பெரும்பாலான அலுவலகங்களைப் புதுப்பிக்க, முதல்வர் அவர்கள் 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து வழங்கி இருக்கிறார்கள். தொடர்ந்து அந்தப் பணி நடைபெற்று வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் புதிய வட்டாட்சியர் அலுவலகம் தோற்றுவிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். சென்னை நகரம் மற்றும் இன்னும் பிற இடங்களிலே அதிகமாக மக்கள் தொகை கொண்டிருக்கின்ற பகுதிகளிலே மக்கள் தொகைக்கேற்ப புதிய வட்டாட்சியர் அலுவலகங்களைத் தோற்றுவிப்பது சம்பந்தமாக மாண்புமிகு முதல்வரோடு கலந்து - மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த இரண்டு ஆண்டு காலமாகக் கேட்கிறார்கள். நம்முடைய தேர்தல் ஆணையத்தினுடைய தடை ஓராண்டுகாலம், ஒன்றரை ஆண்டுகாலம் நீடித்தது. கடந்த ஆண்டுதான் தேர்தல் ஆணையத்தினுடைய தடை நீக்கப்பட்டிருக்கிறது. தடை நீக்கப்பட்டவுடனே ஆத்தூரிலும், தண்டராம்பட்டிலும் புதிய வட்டாட்சியர் அலுவலகங்கள் துவக்கப்பட்டிருக்கின்றன. வருகிற நிதியாண்டிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து பேசி அரசு பரிசிலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் கோட்டாட்சியர் அலுவலகம் உத்தரவிடப்பட்டு ஓராண்டுகாலமாக சிறப்பான பணி நடைபெற்று வருகின்றது. அது வாடகைக் கட்டடத்திலே இன்றும் இயங்கி வருகிறது. புதிய கட்டடம் கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் ஏறக்குறைய ஆறு மாதகாலமாக அறிவிப்பு வெளியாகியும் இன்னும் கட்டடம் கட்டுவதற்கான அடிகோல் விழா நடைபெறாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக புதிய கட்டடம் கட்டுவதற்கு ஆவன செய்வாரா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அது பொதுப் பணித் துறைக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதுசம்பந்தமாக பொதுப் பணித் துறை நடவடிக்கை எடுத்து

2008 நவம்பர் 12]

வருகின்றது. விரைந்து புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையோடு தொடர்புடைய ஒரு கோரிக்கையை நான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலேயும், மாநில அரசிடத்திலும், இந்த அவையிலும் திருப்பூரைத் தலைமையிடமாகக்கொண்டு ஒரு தனி மாவட்டம் உருவாக்க வேண்டுமென்று வைத்தபோது அதை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணையின்பேரில் கடந்த நிதிநிலை அறிக்கையிலே புதிய மாவட்டம் உருவாக்கப்படும் என்ற அறிவிப்பைத் தொடர்ந்து தற்போது அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. ஆகவே, புதிய மாவட்டத்திற்கான பணிகள் துவக்கியிருக்கிற இந்த நேரத்தில் திருப்பூர் மாவட்ட மக்களின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், நிதி அமைச்சர் அவர்களுக்கும், இதற்குப் பெருந்துணையாக இருந்த உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த மாவட்ட மக்களின் சார்பில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்காக புதிய மாவட்டத்திலே இரண்டு வருவாய்க் கோட்டங்கள் திருப்பூர், தாராபுரம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த மாவட்டத்திலே இடம்பெற்றிருக்கிற உடுமலை தாலுகா மிகப் பெரிய தாலுகாவாக இருக்கிற காரணத்தினால், அதை இரண்டாகப் பிரித்து அங்கு உடுமலையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு தனி வருவாய்க் கோட்டம் உருவாக்கி, இந்த மாவட்டம் துவங்குகிறபோது அந்தப் பணியையும் இணைத்து செயல்படுத்த அரசு முன்வருமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதுதான் புதிய மாவட்டம் உருவாகியிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உடுமலை வட்டத்தை இரண்டாகப் பிரித்து புதிய கோட்டம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

அதுசம்பந்தமாக முதல்வர் அவர்களோடு கலந்து, வருகிற நிதி ஆண்டிலே அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ், மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

15—

சார் பதிவாளர் அலுவலகம்

***2191—திரு. பெ. காமராஜ்:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதி, தரகம்பட்டியில் அமைந்துள்ள சார் பதிவாளர் அலுவலகம் சொந்தக் கட்டடத்தில் இயங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கிருஷ்ணராயபுரம் தொகுதியில் தரகம்பட்டி சார் பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அரசாணை எண் 103, வணிக வரி மற்றும் பதிவுத் துறை நாள் 30-10-08 அன்று வெளியிடப்பட்டுள்ளது. இப்பணி விரைவில் தொடங்கி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரகம்பட்டி பகுதி மக்களின் நீண்டகால கோரிக்கையை ஏற்று, அரசு சார்பில் சார் பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கிய பொற்கால ஆட்சியின் தலைவர், மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், தொகுதியின் தலைமையிடமாக உள்ள கிருஷ்ணராயபுரத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும்

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS